# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II , ULUNDURPET

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Code of Criminal Procedure)

## CC NO. 266/2024

**Date** : 08.05.2025 **PW 10/ LW8**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாலமுரளி | ஆதார் எண் | |
| தந்தை பெயர் | சூடாமணி | தொழில் | காவல் ஆய்வாளர் - கரியாலூர் |
| கிராமம் | கரியாலூர் | வயது | 44 |
| எதிரிகள் 2, 3, 4, 6, 7, 8 ஆஜர். எதிரிகள் 5, 9 ஆஜர் இல்லை. கு.வி.மு.ச 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை**

நான் தற்போது கரியாலூர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் திருநாவலூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது, கடந்த 28.04.2021 அன்று மாலை 02.00 மணியளவில் நிலைய பொறுப்பில் இருந்தபோது, அதே காவல் நிலைய CSR. எண்.292/2021 மற்றும் அதனுடன் இணைந்த புகார் மனுவையும் பரிசீலனை செய்தபோது கடந்த 26.04.2021 அன்று மாலை 16.45 மணியளவில் தலைமைக்காவலர் திரு.ஆசைத்தம்பி நிலைய பொறுப்பில் இருந்தபோது ஆரியநத்தம் கிராமத்தைச் சேர்ந்த தனலெட்சுமி, க/பெ.சுரேஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்தப் புகாரைப்பெற்று நிலைய மனு ரசீது எண். 292/2021 பதிவு செய்துள்ளார். பின்னர் மேற்படி புகார் மனுவை எனது பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு நிலைய குற்ற எண். 308/2021-ல் 1 முதல் 9 எதிரிகளுக்கு எதிராக **இ.த.ச பிரிவுகள் 147, 148, 294(b), 323, 324, 506(2) r/w 4 of TNWH Act**-ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் **பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6** ஆகும். பின்னர் அன்றைய தினமே மாலை 15.30 மணியளவில் இவ்வழக்கில் சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் குப்புசாமி, மணி முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7** ஆகும். பின்னர் சம்பவ சாட்சிகளான தனலெட்சுமி, ஆறுமுகம், ரம்யா, அனிதா மற்றும் பார்வை மகசர் சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்து சம்பவம் உண்மை என தெரியவந்ததால் இவ்வழக்கின் எதிரிகள் ஆனந்தன், செல்வம் ஆகியோர்களை அன்றைய தினம் இரவு 19.00 மணியளவில் கூட்டடி கள்ளக்குறிச்சி பேருந்து நிறுத்தம் அருகில் வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். இப்படிக்கு மற்ற எதிரிகள் முன்பிணை பெற்றுவிட்டதால் அவர்களைக் கைது

செய்ய இயலவில்லை. பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சிகள் சுரேஷ், மணி ஆகியோர்களுக்கு **சிகிச்சை அளித்த மருத்துவர் சுரேஷ்** அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து இருவருக்கும் ஏற்பட்ட காயங்கள் சொற்பகாயம் என அவர் வழங்கிய காயச்சான்றிதழைப் பெற்றேன். மணியின் காயச்சான்றிதழ் அ.சா.ஆ.2 ஆகவும், சுரேஷின் காயச்சான்றிதழ் அ.சா.ஆ.3 ஆக ஏற்கனெவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் இவ்வழக்கில் சட்டப்பிரிவுகளை **இ.த.ச பிரிவுகள் 147, 148, 294(b), 323, 324, 506(2) r/w 4 of TNWH Act ல் இருந்து இ.த.ச பிரிவுகள் 147, 148, 294(b), 323, 324, 506(2), 352 r/w 4 of TNWH Act ஆக பிரிவு மாற்றம் செய்து பிரிவு மாற்றல் அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆகும்.** இத்துடன் விசாரணையை முடித்து எதிரிகள் 1 முதல் 6 எதிரிகளுக்கு எதிராக **இ.த.ச பிரிவுகள் 147, 148,294(b), 323. 324, 506(2) r/w 4 of TNWH Act ன்** கீழும் 7,8,9 எதிரிகளுக்கு எதிராக **இ.த.ச பிரிவுகள் 147, 148, 294(b), 506(2), 352 ன் கீழும்** இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

வழக்கின் இறுதி அறிக்கை நான் தான் தாக்கல் செய்தேன். வழக்கின் முதல் தகவல் அறிக்கையும் நான் தான் பதிவு செய்தேன். புகார்தாரரிடம் இருந்து புகாரை நான் பெறவில்லை என்று சொன்னால் அது சரிதான். புகார்தாரரிடம் இருந்து புகாரை பெற்று CSR ரசீது நான் வழங்கினேனா என்றால் இல்லை. தலைமை காவலர் ஆசைத்தம்பி என்பவர் வழங்கினார். புகாரை காவல் நிலையத்தில் புகார்தாரர் எப்போது கொடுத்தார் என்றால் 26.04.2021 அன்று 16.45 மணியளவில் புகார் கொடுக்கப்பட்டது. புகாரின் அடிப்படையில் CSR மனு வழங்கப்பட்டு வழக்கு கோப்பு எப்போது எனது பார்வைக்கு வைக்கப்பட்டது என்றால் 28.04.2021 அன்று 14.00 மணிக்கு வைக்கப்பட்டது. வழக்கு கோப்புகளை பெற்றவுடன் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்னர் சம்பவ இடம் சென்றேனா அல்லது சம்பவ இடம் சென்று விசாரணை செய்த பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேனா என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விட்டு தான் சம்பவ இடம் சென்றேன். சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 28.4.2021 அன்று மாலை 15.30 மணிக்கு சென்றேன். நான் வழக்கு சம்பந்தமாக VAO வை எதுவும் விசாரணை செய்தேனா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு அருகே வீடோ அல்லது நிலமோ உள்ள நபர்கள் யாரேனும் நான் சம்பவ சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. நான் வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ள நபர்கள் அனைவரும் புகார்தாரர் தனலட்சுமியின் உறவினர் என்று சொன்னால் அது சரிதான். பிரச்சனையானது சிவில் (CIVIL) சம்பந்தமான பிரச்சனை என்பதால் அதைப்பற்றி VAO-விடம் ஏதும் நான் விசாரணை செய்தேனா என்றால் இல்லை. நான் சம்பவ இடத்தை பார்வையிட்டு மகசர் சாட்சிகளாக குப்புசாமி மற்றும் மணி என்பவர்களை மகசர் சாட்சிகளாக சேர்த்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் மகசரில் இரண்டாவதாக கையொப்பம் பெற்றுள்ள மணி என்பவரிடம் கையொப்பம் பெறவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. நான் சம்பவ இடம்

செல்லவில்லை என்று சொன்னாலோ சாட்சிகளை சரிவர விசாரணை செய்யவில்லை என்று சொன்னாலோ காவல் நிலையத்திலேயே வைத்து வழக்காவணங்கள் அனைத்தும் தயார் செய்து எதிரிகளுக்கு எதிராக தவறான இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. வழக்கில் காயமடைந்த நபர்கள் உள்நோயாளியாக மருத்துவமனையில் சிகிச்சையில் பெறவில்லை. திருநாவலூர் காவல் நிலைய குற்ற எண்.309/2021 என்ற வழக்கில் 3 வது எதிரியாக குறிப்பிடப்பட்டுள்ள கலியபெருமாள் மகன் ஆறுமுகத்தை தான் நான் இவ்வழக்கில் சாட்சிப்பட்டியலில் 2 வது சாட்சியாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் அது சரிதான். நான் புகார்தாரரிடம் இருந்து ஒரு பொய்யான புகாரை பெற்று எதிரிகளுக்கு எதிராக தவறான வழக்கு பதிவு செய்யப்பட்டு அந்த வழக்கில் எதிரி ஆனந்தம் மற்றும் செல்வத்தை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன் என்று சொன்னால் அது சரியல்ல. நான் வெளி சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யாமல் புகார்தாரருக்கு நெருங்கிய உறவினர்களை மட்டும் விசாரணை செய்து தவறான இறுதி அறிக்கை பதிவு செய்து எதிரிகளை நீதிமன்றத்திற்கு அலைக்கழித்தேன் என்று சொன்னால் அது சரியல்ல. இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை மட்டும் தான் நான் தயார் செய்தேன் என்று சொன்னாலோ சாட்சிகள் யாரையும் நான் விசாரணை செய்யவில்லை என்று சொன்னாலோ அது சரியல்ல.

<u>**மறுவிசாரணை-**</u> இல்லை

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

Sd- Thiru.R.P.Ajieth Singh Raaja
Judicial Magistrate-II,
Ulundurpet.